# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2100/30 - 2018 දෙසැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.12.07

*2100/30 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்***

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், இலங்கை மின்சார சபைக்குத் தேவையாக இருக்கின்ற இங்கு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியினைக் கையேற்கும் ஆலோசனைக்கு இந்தக் கட்டளையின் மூலம் அங்கீகாரம் வழங்குகின்றேன்.*

ரஞ்சித் சியம்பலாபிட்டிய,<br>
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர்.

2018, நவெம்பர் 29.

**அட்டவணை**

இலங்கையில் மேல் மாகாணத்தில், கொழும்பு நிருவாக மாவட்டத்தில் ஹேவாகம் கோரளையில் பல்லேபத்துவே கடுவளை பிரதேச செயலகப் பிரிவில், மாலம்பே மேற்கு 476A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் மாலம்பே மேற்கு கிராமத்தில் அமைந்துள்ளதும், ஹெட்டஹெரலியகஹ கும்புர என்ற காணியில் இலங்கை மின்சார சபையால் தயாரிக்கப்பட்ட 2018.10.17 ஆந் திகதிய CEB/NTDND@EIP/P2/L3_Road என்ற இலக்கம் கொண்ட வரைவு மூலம் காட்டப்படும் அளவில் 30 பேர்ச்சஸ் 30 அடி அகலமான உட்பிரவேசிக்கும் வீதி, 30 அடி உட்பிரவேசிக்கும் வீதிக்கு எல்லைகள் பின்வருமாறாகும் :-

வடக்கு : ஹெட்டஹெரலியகஹ கும்புர, வரைபட இலக்கம் 4259 மற்றும் வாய்க்கால் ;<br>
கிழக்கு : சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை ;<br>
தெற்கு : ஹெட்டஹெரலியகஹ கும்புர, வரைபட இலக்கம் 4259 மற்றும் வாய்க்கால் ;<br>
மேற்கு : இலங்கை மின்சார சபைக்கு சுவீகரிக்கப்பட்ட ஹெட்டஹெரலியகஹ கும்புர (முன் பதிவுவெடுப்புப் படி CO/KDW/2016/410).

*காணிக்கு உரித்து கோருபவர்கள்* : எச். லீலாவதி சில்வா, இல. 144/ 1, குருந்துவத்தை, தலாஹேன, மாலம்பே, எச். ஆரியவத்தி சில்வா, இல. 28, தெற்கு துடல்ல, ஜா-எல, எச். பிரேமவத்தி சில்வா, இல. 148/4, செத்சிறி மாவத்தை, தலாஹேன, மாலம்பே மற்றும் எஸ். எல். சூரியஆரச்சி, போரே, அத்துருகிரிய.




12-663